# மாவட்ட நீதிமன்றம், நாகப்பட்டினம்

## L.A.O.P. No. 43/2019

**நாள்:** 05.02.2025

**பெயர் : பாலமுருகன்**

**PW- 3**

**<u>குறுக்கு விசாரணை</u>**

கட்டுமான பொறியியல் படிப்பு படித்த ஆவணத்ததை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கட்டுமான பணியில் 15 வருட அனுபவம் பெற்ற ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆ.தி.மு.க கட்சியை சேர்ந்தவர் என்றால் சரிதான். கடந்த 2019 முதல் 2024 வரை பாப்பாகோவில் ஊராட்சி மன்ற தலைவாரக இருந்தேன் என்றால் சரிதான். அப்பாராஜ் அவர்கள் ஆ.தி.மு.க கட்சியை சேர்நதவர் என்றால் எனக்கு தெரியாது. அவர் ஆ.தி.மு.க கட்சியை சேர்ந்தவர் தான் வழக்கிற்க்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியில்லை. பண்னை பராமரிப்பு பற்றிய கட்டுமான சம்பந்தபட்ட பிலான் அப்புருவல் ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் பார்வையிடும் போது ஸ்தலத்தில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் உள்ள நிலத்தின் சர்வே எண்கள் விவரங்கள் தெரியாது என்று சொன்னால் சரியல்ல. நானும் மனுதாரர் அப்பாராஜ் அவர்களும் நன்பர் என்ற முறையில் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.